**எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்**

**(பிரிவு 3 யு.ஜி.சி.சட்டம் 1956ன் கீழ் நிகர்நிலைப் பல்கலைக் கழகம்)**

**எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளி**

# மூன்றாம் ஆண்டு தேசிய

# அளவிலான தமிழ் வழக்கு வாதப் போட்டி – (௨௦௨௧–௨௦௨௨)




| | | | |
|---|---|---|---|
| பிலவ வருடம்<br>ஐப்பசி மாதம்<br>**05** மற்றும் **06** ம்<br>தேதிகள் | zoom | **2021** | அக்டோபர்<br>**22 & 23** |

## எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்
## எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளி வழங்கும்

### மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
### 22-அகடோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் எஸ்ஆர்எம் சட்டப்பள்ளியை, 2014 ஆம் ஆண்டு நிறுவியது.

எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனமானது தனியார் கல்லூரிகளுக்கான தரவரிசைப்பட்டியலில் முதலிடத்திலுள்ளது.

இது தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவால் அறிவிக்கபட்டது.

மனிதவள மேம்பாட்டுத் துறையினால் முதல் தர வரிசைக் கல்லூரி என்ற அங்கீகாரம் பெற்ற எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது

எஸ்ஆர்எம் சட்டப்பள்ளியில் ஆயிரத்தைம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் உள்ளனர்.

இங்கு மூன்று ஆண்டு சட்டப்படிப்பு மற்றும் ஐந்து ஆண்டு சட்டப்படிப்பு மற்றும் முதுகலைச் சட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது.

**இங்கு சட்டம் சார்ந்த ஆராய்ச்சியும மேற்கொள்ளப் படுகிறது.**

இங்கு பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் அனைத்தும் பார் கவுன்சில் ஆப் இந்தியாவால் பரிந்துரைக்கப்பட்டதாகும்.

சட்டப்பாடங்களை தவிர அரசியல், அறிவியல், சர்வதேச உறவுகள், இந்திய வரலாறு போன்ற இதரப் பாடங்களும் பயிற்றுவிக்கப்படுகிறது,

SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

**மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி**
**22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021**

## பொருளடக்கம்


1. அதிகாரப்பூர்வ அழைப்பு ........................................................ 4

2. வழக்கின் பொருண்மைகள் .................................................... 5

3. விதிமுறைகள் ....................................................................... 8

4. நிகழ்ச்சி நாட்கள் ................................................................. 17

5. விருதுகள் .............................................................................. 17

6. தகவல் .................................................................................... 18

7. பதிவுப் படிவம் ....................................................................... 19

8. உறுதிப் படிவம் ....................................................................... 20



SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s.3 of UGC Act, 1956)

# **மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி**
# **22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021**

## <u>அதிகாரப்பூர்வ அழைப்பு</u>

எங்களது எஸ்.ஆர்.எம். சட்டப்பள்ளியில் வருகின்ற 22 **அக்டோபர் மற்றும்** 23 **அக்டோபர் வரை** நடக்கவிருக்கும் **மூன்றாம்** ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டிக்கு வருகை தர தங்களை அழைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். பங்கு பெற விரும்பும் கல்லூரிகள் **அக்டோபர் 10ம்** தேதி மாலை 5.00 மணிக்குள் GOOGLE FORM-ல் குழுவின் பெயர், தகவல்கள் மற்றும் பணம் செலுத்தியதற்கான ரசீது, பதிவிறக்கப்படிவம் ஆகியவற்றை பதிவேற்றம் செய்து தங்களது அணியினை பதிவு செய்து கொள்ள வேண்டும். வாதுரையை மின்னஞ்சல் மூலம் 18.10.2021-க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

முனைவர்.சி.சிவகுமார்
துறைத்தலைவர்
எஸ்.ஆர்.எம்.சட்டப்பள்ளி

பேராசிரியர் முனைவர் C A.குருதத்
முதல்வர்
எஸ்.ஆர்.எம்.சட்டப்பள்ளி

## மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

### வழக்கின் பொருண்மைகள்

பறம்பு நாட்டில் உள்ள செங்காந்தள் மாநிலத்தின், குறிஞ்சி மாவட்டத்தில் வர்ணம் என்ற அரசுசாரா தன்னார்வ அமைப்பானது செயல்பட்டு வருகின்றது. வர்ணம் அமைப்பின் முக்கிய பணியே, சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு அவலநிலைக்கு உள்ளாகியிருக்கிற மூன்றாம் பாலினத்தவரின் நலனுக்காக போராடுவதே ஆகும். மூன்றாம் பாலினத்தவருக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றில் உரிய வாய்ப்பு மற்றும் அங்கீகாரமும் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக இவ்வமைப்பு கடந்த 15 வருடங்களாக போராடி வருகின்றது.

செய்தித்தாள்கள், ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் மூன்றாம் பாலினத்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பரவலாக பேசப்பட்டு வருகிறது. எனவே வர்ணம் அமைப்பானது மூன்றாம் பாலினத்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து புள்ளியியல் ஆய்வு மேற்கொண்டது. அந்த ஆய்வன் முடிவில் அதிர்ச்சியளிக்கக்கூடிய வகையில் மூன்றாம் பாலினத்தவருக்கு எதிரான பல சமூக அவலங்கள் நடப்பது பற்றி தெரிய வந்தன. இதுமட்டுமின்றி ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டங்கள் (மூன்றாம் பாலினத்தவர் நலன் குறித்து) நடைமுறையில் இருந்தபோதிலும் அவர்களுக்கான பாதுகாபபு, கல்வி உரிமை, வேலைவாய்ப்பு மற்றும் சமூக அங்கீகாரம் என்பது இன்று வரை உறுதி செய்யப்படாமல் கேள்விக்குரியாகவே உள்ளது.

இந்நிலையில் குறிஞ்சி மாவட்டத்தில் வசிக்கும் இளமதி, ஓர் இளங்கலை பட்டதாரி. அவர் செங்காந்தள் மாநிலத்தின் பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒரு போட்டித்தேர்வை எழுதினார். அத்தேர்வானது எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு என்ற இரு நிலைகளைக் கொண்டது. இரு நிலைகளிலும் வெற்றி பெறுவோருக்கு மட்டுமே பணி நியமன ஆணை வழங்கப்பெறும். இளமதி எழுத்து தேர்வை முடித்து அதன் முடிவிற்காக ஆவலுடன் காத்திருந்தார்.

இந்நிலையில் செங்காந்தள் மாநிலத்தின் பணியாளர் தேர்வாணையம் ஆனது இத்தேர்வின் முடிவுகள் "நிரோனா" பெருந்தொற்று காரணமாக ஒரு

வருடம் கழித்து வெளியிடப்படும் என்று அரசு செய்தித்தாள்களிலும் உள் வட்டார மொழி செய்தித்தாள்களிலும் செய்தி வெளியிட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் இளமதி தன்னை ஒரு ஆணாக உடலளவில் உணரத் தொடங்கியதால் பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டார். உடனே தன்னுடைய பெயரையும் "இளமாறன்" என்று மாற்றி பதிவு செய்து அரசிதழிலும் அப்பெயர் வெளியிடப்பட்டு விட்டது.

இந்நிலையில் எழுத்து தேர்வு முடிவு வெளியிடப்பட்டு, நேர்முகத் தேர்வுக்கு தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியலை செங்காந்தள் பணியாளர்கள் தேர்வாணையம் வெளியிட்டது. அதில் இளமதி பெயரும் பொதுப்பிரிவில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டில் இடம் பெற்று இருந்தது. தேர்வு முடிவு அறிவிக்கப்பட்டவுடனே இளமதி / இளமாறன் தான் பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டது பற்றியும், தன்னுடைய பெயர் நேர்முகத் தேர்வுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம் பெற்றிருப்பது பற்றியும் அதனடிப்படையில் தன்னை நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்குமாறு செங்காந்தள் மாநில பணியாளர் தேர்வாணையத்துக்கு பதிவு அஞ்சல் மூலமாக கடிதம் மற்றும் மின்னஞ்சலும் அனுப்பினார். நேர்முகத் தேர்வுக்கான நாளை எதிர்நோக்கி காத்திருந்தார்.

நேர்முகத் தேர்வுக்கு முந்தைய நாள் வரை பணியாளர் தேர்வானையத்திடம இருந்து நேர்முகத் தேர்விற்கான எந்த அழைப்பு கடிதமும் இளமதி / இளமாறனுக்கு கிடைக்கப்பெறவில்லை.

ஆகவே, இளமாறன் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாளன்று நேரிடையாக நேர்முகத் தேர்வு நடைபெறும் இடத்திற்கே சென்று அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து, நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள தனக்கு அனுமதி அளிக்குமாறு வேண்டினார். ஆனால் அவருடைய வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதுடன் அவருடைய பெயரும் நேர்முகத் தேர்வுக்கு தேர்வானவர்களின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட விவரமும் அவருக்கு தெரிய வந்தது.

இதனால் மேற்படி வர்ணம் அமைப்பை பற்றி கேள்விப்பட்ட இளமாறன் அவர்களுடைய உதவியை நாடினார். வர்ணம் அமைப்பானது இளமாறனின் பிரச்சனையை மாண்பமை செங்காந்தள் உயர்நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றது. செங்காந்தள் உயர்நீதிமன்றத்தில் விசாரணையும் நடைபெற்றது.

விசாரணையின் போது அரசு தரப்பில் “பெண்ணாக இருந்த இளமதி பின்பு ஆணாக மாறுவதற்கு அறுவை சிகிச்சை செய்து கொண்டு ஆணாக மாறி தன்னுடைய பெயரையும் இளமாறனாக மாற்றி அதை அரசிதழிலும் பதிவு செய்து கொண்டார். ஆனாலும் அவருக்கு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டது. ஏனென்றால் தேர்வுக்கான அறிவிக்கை வெளியாகிய நாளில் அவர் எந்த பாலினத்தில் இருந்தாரோ அந்த பாலினமே அவருக்கு பொருந்தும். அவர் தான் பொதுப்பிரிவில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டில் தேர்வாகி இருந்தாலும் தற்பொழுது அவர் பெண் இல்லை” என கூறப்பட்டது.

அரசு சார்பாக கூறப்பட்ட வாதங்களை ஏற்றுக் கொண்ட மாண்பமை செங்காந்தள் உயர்நீதிமன்றத்தின் இருவராயம் வழக்கை தள்ளுபடி செய்தது. மேற்படி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, வர்ணம் அமைப்பு மாண்பமை உச்சநீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தது.

ஆருட மற்றும் கல்லா மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களிலும் இதே போன்ற வழக்குகள் (மூன்றாம் பாலினத்தவருக்கான இட ஒதுக்கீடு) நிலுவையில் இருந்தது.

வர்ணம் அமைப்பானது மாண்பமை உச்சநீதிமன்றத்தை அனுகிய போது, இவ்வழக்கைப் போன்று மூன்றாம் பாலினத்தவர்கள் தொடர்புடைய மற்ற உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளையும் தானாகவே முன்வந்து உச்சநீதிமன்றம் பொதுநல வழக்காக விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. மேற்படி அனைத்து வழக்குகளும் ஒரே வழக்காக உச்சநீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வந்தது.

1. இந்திய திருநாட்டின் அனைத்து சட்டங்களும் பறம்பு நாட்டிற்கு பொருந்தும்.
2. தமிழ்நாடு மாநிலத்தின் அனைத்து சட்டங்களும் செங்காந்தள் மாநிலத்திற்கும் பொருந்தும்.

**மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி**
**22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021**

விதிமுறைகள்

1. **போட்டி நடக்கும் தேதி மற்றும் இடம்:**

**மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி– 2021 வருடம் அக்டோபர் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிறது. இப்போட்டியின் வழக்காடு மொழியானது தமிழ், எனவே அனைத்து சுற்றுகளும் வாதுரைகளும் தமிழ்மொழியில் மட்டுமே இருக்க வேண்டும்.**

2. அணியினருக்கான தகுதிகள்:

1. இப்போட்டிக்குத் தகுதியான மாணவர்கள் மூன்றாண்டு சட்டப்படிப்பு (அ) ஐந்தாண்டு சட்டப்படிப்பு பயின்று வரும் மாணவர்கள் மட்டும் போட்டியில் பங்கு கொள்ள இயலும்.
2. ஒவ்வொரு கல்லூரி / பல்கலைகழகத்திற்கு அதிகபட்சம் இரண்டு அணிகள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
3. ஒவ்வொரு அணிக்கும் இரண்டு வழக்காடுபவர்கள் மற்றும் ஒரு ஆராய்ச்சியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**2.1.** பொது விதிமுறைகள் :-

1. **இந்த போட்டியானது “ZOOM” என்ற செயலியின் மூலம் ‘மெய்நிகர்’ பயன்முறையில் (VIRTUAL MODE) நடத்தப்படும்.**
2. **ஒவ்வொரு வழக்காடுபவரும் அவர்களுக்கென அனுமதிக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே நீதிபதியுடன் கலந்துரையாட வேண்டும். நீதிபதியிடம் வாய்மொழியாக மட்டுமே கலந்துரையாட வேண்டும்.**
3. **வழக்காடும் போது வாய்மொழி கலந்துரையாடல் தவிர வழக்கு தொடர்பான வேறு எவ்வித ஆவணங்களையும் திரையில் பகிரக் கூடாது.**

SRM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY (Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

4. வாய்மொழியாக வாதிடும் போது தங்களது ‘காணொளி’ (CAMERA) மற்றும் ‘கேட்பொலி’ (MICRO PHONE) நீதிபதிகளுக்கு தெளிவாகத் தெரியும்படியும், கேட்கும்படியும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

5. போட்டியாளர்கள் அனைவரும் நீதிபதியுடன் கலந்து வாதாடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தங்கள் ‘கேட்பொலிகளை’ (MICRO PHONE) ‘சத்தமில்லாமல்’ (MUTE) வைத்துக் கொள்ள வேண்டும்.

6. வாதாடுபவர்கள் வாதிடும் போது உட்கார்ந்து கொண்டோ அல்லது எழுந்து நின்று கொண்டோ தங்கள் வாதத்தினை எடுத்துரைக்கலாம்.

7. போட்டியாளர்கள் ‘ZOOM’ செயலியில் உள் நுழையும் போதோ அல்லது வழக்கை வாதிடும் போதோ ஏதேனும் தொழில்நுட்ப கோளாறு ஏற்படும்போது எங்களது தொழில்நுட்ப வல்லுநரிடம் உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும். **இணையத் தொடர்பு சம்மந்தமாக ஏழும் பிரச்சனைகளுக்கு குழு பொறுப்பல்ல, போட்டியாளர்களே பொறுப்பாவர்கள்.**

8. தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டால் மேற்கொண்டு எவ்வாறு அந்த அமர்வினை நடத்த வேண்டும் என்பதை தொழில்நுட்ப வல்லுநரே முடிவு செய்வார். அவரின் முடிவே இறுதியானது ஆகும்.

9. வாதிடும் அறை வாதிடும் போது அதன் சுற்றுபுற சூழல் அதற்கு ஏற்றார் போல் அமைத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு போட்டியாளரின் கடமையாகும்.

10. வாதிடும் போது அமர்வின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ போட்டியாளரோ அல்லது அணியினைச் சேர்ந்தவரோ, எந்த ஒரு நபரோ ஒளி மற்றும் ஒலியினை (VIDEO & AUDIO) பதிவு செய்தல் தடை செய்யப்பட்ட ஒன்றாகும்.

11. முதல் 8 அணிகள் முதல் நிலை சுற்றிலிருந்து கீழ்க்கண்ட விதிமுறைகளின் படி தேர்ந்தெடுக்கப்படுவர்.

    I. முதல்நிலை சுற்றின் இரண்டு சுற்றுகளிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் காலிறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

II. மொத்த மதிப்பெண்களில் அணிகளுக்கிடையே சமநிலை மதிப்பெண் ஏற்படுமாயின் முதல்நிலைச் சுற்றில் வெற்றி பெற்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் காலிறுதி நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

III. வெற்றி பெற்ற மதிப்பீடுகளில் அணிகளுக்கிடையே சமநிலை தொடருமாயின் முதல்நிலைச் சுற்றுகளில் வாதத் திறனில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் காலிறுதிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

IV. மேற்குறிப்பிட்ட நிலைகளை கடந்து சமநிலை அணிகளுக்கிடையே தொடருமாயின் அணிகள் சமர்பித்த எழுத்துபூர்வமான வாதுரையில் பெற்ற அதிக மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

12. **இந்த மாதிரி நீதிமன்ற போட்டி சம்மந்தமாக ஏதேனும் மாறுப்பட்ட கருத்துக்கள் ஏற்படின் மாதிரி நீதிமன்ற ஒருங்கிணைப்பு குழுவின் முடிவே இறுதியானது.**

## 2.2 தகுதி நீக்கம்.

1. போட்டியாளர்கள் வாதிடும்போது (அ) போட்டி நடக்கும் எவ்வித நேரங்களிலும் அவர்களின் அடையாளத்தையோ, அவர்கள் சார்ந்த கல்லூரியின் அடையளத்தையோ அறிந்து கொள்ளும் வகையில் எவ்விதமான அடையாளத்தையும், அடையாள அட்டைகளையும் பயன்படுத்தக்கூடாது. மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும்.

2. மாணவ வழக்குரைஞர்கள் தங்கள் வாதத்தின் நீதிபதிகளிடம் எடுத்துரைக்கும் போதே அல்லது நீதிபதிகளின் தீர்ப்பிற்கு பிறகோ நீதிமன்றத்தில் பின்பற்றும் நடைமுறை விதிகளை பின்பற்றி மிகவும் கண்ணியத்துடன் நடந்துக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் எவ்வித முன்னறிப்பும் இன்றி போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

SRM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY (Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

## மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

**3. அணி பதிவு செய்யும் முறை:**

1. **10.10.2021** முதல் பதிவு செய்யலாம். அணிகள் கீழ்கண்ட **GOOGLE FORM-ல்** பதிவு செய்ய வேண்டும்.
   https://forms.gle/82qj8NRrkbRHFCq37

2. பதிவு செய்த அணிகள், பதிவு படிவம் மற்றும் முதல்வரிடம் இருந்து பெற்ற ஒப்புதல் படிவம் இரண்டையும் **GOOGLE FORM-ல்** பதிவேற்றம் **(UPLOAD)** செய்யவேண்டும்.
3. பதிவுக் கட்டணம் ரூ.**2500/-** (ஒரு அணிக்கு).
4. பதிவுக் கட்டணம் **NEFT PAYMENT** மூலம் மட்டுமே செலுத்தப்பட வேண்டும். செலுத்தப்பட்டதிற்கான ஒப்புகை சீட்டை **(TRANSACTION RECIEPT) GOOGLE FORM-ல்** பதிவேற்றம் **(UPLOAD)** செய்யவேண்டும்.

**வங்கி கணக்கின் விபரம்**

1. **INDIAN BANK, SRM UNIVERSITY, KATTANKULATHUR**
2. **A/C NO : 6314094173**
3. **A/C NAME : SRM SCHOOL OF LAW**
4. **IFSC CODE : IDIB000S181**

SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

**4.சீருடை:**

பங்கேற்பாளர்கள், மாணவ வழக்குரைஞர்க்கு உரிய சீருடையில் மட்டுமே போட்டி நடைபெறும் மாதிரி நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்படுவர்.

**5.வாதுரையின் உள்ளடக்கம்**

1. அட்டைப்பக்கம்
2. வழக்கின் பட்டியல்
3. சொற்றொடரின் சுருக்கப்பட்டியல்
4. நீதிமன்ற ஆள்வரம்பு
5. எழுவினாக்கள்
6. சுருக்க வாதுரை
7. விரிவான வாதுரை
8. இறைஞ்சுதல்

## மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

**5.1.** வாதுரையின் மதிப்பீடு:

வாதுரையை மதிப்பிடுவதற்காக போட்டியின் ஒருங்கிணைப்பாளர் குழு அனுபவமிக்க நீதிபதி குழு ஒன்றை அமைக்கும். அந்த குழு வாதுரையை தனித்தனியாக 0–70 வரையிலான மதிப்பெண்களில் மதிப்பிடும். காரணிகள் கீழ் குறிப்பிட்டுள்ளது.

| வ.எண் | காரணிகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| **1.** | பொருண்மை குறித்த தெளிவு | **10** |
| **2.** | வாதுரை ஆராய்ச்சியின் தன்மை | **10** |
| **3.** | சட்டப்பகுப்பாய்வு, சட்ட முதுமொழி,<br>சட்டச்சொற்கள், கோட்பாடுகள் | **10** |
| **4.** | முன்தீர்ப்புகளைக் கையாளும் விதம் | **10** |
| **5.** | படைப்பு<br>1. அட்டைப்பக்கம்<br>2. வழக்கின் பட்டியல்<br>3. சொற்றாடரின் சுருக்கப்பட்டியல் | **10** |
| | 4. நீதிமன்ற ஆள்வரம்பு | **5** |
| | 5. எழுவினாக்கள்<br>6. சுருக்க வாதுரை<br>7. விரிவான வாதுரை | **10** |
| | 8. இறைஞ்சுதல் | **5** |
| | மொத்தம் மதிப்பெண்கள் | **70** |

SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

## மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

5.2. அபராதம்:

அபராதமானது எதிர்மறை மதிப்பெண்களாக பின்வருமாறு வழங்கப்படும்.

1. குறிப்பிட்ட நேரத்தில் வாதுரையை சமர்ப்பிக்கத்தவறினால் 2 மதிப்பெண்கள் தலா ஒரு வாதுரைக்கு முதல் 12 மணி நேரத்திற்கும் குறைக்கப்படும் மற்றும் 1 மதிப்பெண் தலா ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கும் குறைக்கப்படும்.
2. தவறான அட்டைக்கு 1 மதிப்பெண் தலா ஒரு வாதுரைக்கு குறைக்கப்படும்.
3. கொடுக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையை மீறினால் 1 மதிப்பெண் தலா ஒரு கூடுதல் பக்கத்திற்கு குறைக்கப்படும். அதிகபட்ச பக்க எண்ணிக்கை 30 ஆகும்.
4. கொடுக்கப்பட்ட உள்ளடக்கத்தை பின்பற்றாமலோ / தேவையற்ற உள்ளடக்கத்தைச் சேர்த்தாலோ 1 மதிப்பெண் குறைக்கப்படும்.
5. குறிப்பிட்டுள்ள விதிகளை மீறுவது:

- எழுத்து அளவு - லதா.
- ஒவ்வொரு தவறுக்கும் தலா 3 மதிப்பெண்கள்.
- தவறான எழுத்து அளவு : 0.5 மதிப்பெண்கள் தலா ஒரு பக்கம்.
- தவறான இடைவெளி : 0.5 மதிப்பெண்கள் தலா ஒரு பக்கம்.
- தவறான நிறக்குறிப்பு (அட்டைப் பக்கம்) :2 மதிப்பெண்கள் ஒவ்வொரு வாதுரைக்கும்.

மனுதாரரின் வாதுரை மேல் அட்டை நீல நிறத்திலும், எதிர் மனுதாரரின் வாதுரை மேல் அட்டை சிகப்பு நிறத்திலும் இருக்க வேண்டும்.

6. வாய்மொழிச்சுற்று வடிவம் மற்றும் மதிப்பிடும் முறை:

6.1. தகுதிச் சுற்று :

தகுதிச் சுற்று இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும். ஒவ்வொரு சுற்றிலும் அணிகள் வாதி / பிரதிவாதியாக வாதிடுவர்.

வாதி / பிரதிவாதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு அணிகளை ஒவ்வொரு அமர்வுகளில் குலுக்கல் முறையில் சந்திப்பர்.

## மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

ஒவ்வொரு சுற்றும் 40 நிமிடங்கள் கொண்டதாக நடத்தப்படும். அதில் ஒவ்வொரு அணிக்கும் தலா 20 நிமிடங்கள் வழங்கப்படும்.இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள் அடிப்படையில் கூடுதல் நிமிடங்கள் வழங்கப்படும். **இந்த கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டதாகும். ஒவ்வொரு தகுதி சுற்றும் 2 நீதிபதிகளால் மதிப்பீடு செய்யப்படும்.**

6.2. கால் இறுதிச் சுற்று :

தகுதி சுற்றில் முதல் 8 இடங்களைப் பிடித்த அணிகள் கால் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறும். எந்த அணிகள் வாதி, பிரதிவாதியாக வாதிட வேண்டும் என்பதை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, கால் இறுதிச் சுற்று நடைபெறும்.

ஒரு கால் இறுதிச் சுற்று மொத்தமாக 60 நிமிடங்கள் நடைபெறும்.அதில் ஒவ்வொரு அணிக்கும் 30 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையினைக் கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில் வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 15 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. **கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டதாகும்.**

SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

காலிறுதிச்சுற்று இரு நடுவர்களால் மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0–100 மதிப்பெண்கள் வரை கொடுக்கப்பெற்று, அதில் அதிக மதிப்பெண் பெரும் அணி அரை இறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

# மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
# 22-அகடோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

6.3. அரை இறுதிச் சுற்று :

- முதலில் தேர்வாகும் 4 அணிகள் அரை இறுதி சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படும் வாதி / பிரதிவாதி யார் என்பதனை குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்படுவர்.

- ஒவ்வொரு அரை இறுதிச் சுற்றும் 90 நிமிடங்கள் நடத்தப்படும். இரு தரப்பிற்கும் 45 நிமிடங்கள் வழங்கப்படும். இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். நேர மேலாண்மையினை கருத்தில் கொள்ளுதல் அணியின் அதிகாரத்திற்குட்பட்டதாயினும், ஒரு அணியில் வழக்காடுபவர் ஒருவருக்கு தலா 15 நிமிடங்களுக்கு மேல் வழக்கினை எடுத்துரைக்க அனுமதிக்க இயலாது. **கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டதாகும்.**

- அரை இறுதிச் சுற்றிற்கு மூன்று நீதிபதிகள் கொண்டு தீர்ப்பு அளிக்கப்படும்.

- ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0-100 மதிப்பெண்கள் வரை கொடுக்கப்பெற்று, இதில் எந்த அணி கூடுதல் மதிப்பெண்கள் பெறுகிறதோ அந்த அணி இறுதிச் சுற்றிற்கு தேர்வாகும்.

INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

6.4. இறுதிச் சுற்று :

- முதல் 2 அணிகளும் இறுதிச் சுற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுவர். குலுக்கல் மூலமே வாதாடும் பக்கம் நிர்ணயம் செய்யப்படும்.

- இறுதி சுற்று 90 நிமிடங்கள் நடத்தப்படும். இரு அணிகளுக்கும் தலா 45 நிமிடங்கள் வழங்கப்படும்.

- இது வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள் அடிப்படையில் கூடுதல் நிமிடங்கள் வழங்கப்படும். **கூடுதல் நிமிடங்கள் நீதிபதிகளின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டதாகும்.**

- இறுதிச் சுற்றானது நீதிபதிகள் குழுவால் மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு மாணவ வழக்குரைஞருக்கும் 0-100 மதிப்பெண்கள் வழங்கப்படும். அதில் அதிகம் மதிப்பெண் பெற்ற அணியினர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்கள்.

6.5. வாய்வழி வாதங்களின் ஆணை வாய்வழி வரிசை பின்வருமாறு :

வாதி 1

வாதி 2

பிரதிவாதி 1

பிரதிவாதி 2

வாதியின் மறுதொடக்கம்

பிரதிவாதியின் துணை மறுதளிப்பு

வாய்வழி வாதுரையின் போது, எந்தவொரு மாணவ வழக்கறிஞரும் தனது அடையாளத்தையோ அல்லது அவரின் கல்லூரியின் விவரங்களையோ வெளியிடக்கூடாது.

வாதி மறுப்புக்காக எழும்பவில்லை என்றால் பதில்-மறுப்பு ரத்து செய்யப்படுவதாக கருதப்படுகிறது.

6.6. வாய்வழி வழக்காடும் மதிப்பெண்கள் :

மாணவ வழக்குரைஞரின் வாய்வழி வழக்காடும் திறனை 0-100 மதிப்பெண்கள் அளவில் பின்வருமாறு மதிப்பிடுவர்.

| வ.எண் | தகுதி | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | வழக்கெழு வினா வனைதல் | 10 |
| 2. | சட்ட அறிவு (ம) சட்டப் பகுப்பாய்வு, சட்டச் சொற்கள், சட்ட முதுமொழி, சட்ட கோட்பாடுகள் பயன்படுத்தும் திறன் | 15 |
| 3. | வழக்குகளை மேற்கோள் காட்டுதல் | 15 |
| 4. | பொருண்மைகளின் தெளிவு | 15 |
| 5. | நேர பகுப்பாய்வு | 10 |
| 6. | கேள்விகளுக்கு பதில் அளித்தல் | 15 |
| 7. | விவாதத்தின் திறன் | 10 |
| | மொத்தம் மதிப்பெண்கள் | 100 |

# மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

7. இதர :

நீதிமன்றம் தொடர்பான விதிகளை அமல்படுத்துதல் மற்றும் விளக்குவது தொடர்பான இறுதி முடிவு ஒருங்கிணைப்பாளர் குழுவிடம் உள்ளது.

**நிகழ்ச்சி**

| வ.எண் | நிகழ்ச்சி | தேதி |
|---|---|---|
| 1 | முன்பதிவு செய்ய கடைசி நாள் | 10 அக்டோபர் 2021 |
| 2 | இதர தகவல்களுக்கான கடைசி நாள் | 12 அக்டோபர் 2021 |
| 3 | வாதுரை சமர்ப்பிக்க கடைசி நாள் | 18 அக்டோபர் 2021 |
| 4 | சிறந்த ஆராய்ச்சியாளர்க்கான தேர்வு | 22 அக்டோபர் 2021 |
| 5 | தகுதிச் சுற்று மற்றும் காலிறுதிச்சுற்று | 22 அக்டோபர் 2021 |
| 6 | அரையிறுதி மற்றும் இறுதிச்சுற்று | 23 அக்டோபர் 2021 |

INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

பதிவு செய்வதற்கான இணைப்பு :- https://forms.gle/82qj8NRrkbRHFCq37

**விருது**

| பரிசு | பரிசுத்தொகை |
|---|---|
| முதல் பரிசு | ரூ.30,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ.21,000/- |
| சிறந்த மாணவ வழக்குரைஞர் | ரூ.7,000/- |
| சிறந்த ஆராய்ச்சியாளர் | ரூ.7,000/- |
| சிறந்த வாதுரை | ரூ.7,000/- |

## மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

### தொடர்புக்கான மின்னஞ்சல் முகவரி

மின்னஞ்சல் முகவரி : tamilmcc@srmist.edu.in

### ஒருங்கிணைப்பாளர்

1. திரு.மா.ரமேஷ் உதவிப் பேராசிரியர்

### இணைஒருங்கிணைப்பாளர்கள்

1.திருமதி.க.பவானி உதவிப் பேராசிரியர்
2.திருமதி.சாந்தி பழனி உதவிப் பேராசிரியா
3.திரு.மா.சிதம்பரம் உதவிப் பேராசிரியா
4.திரு.பி.முத்துக்குமார் உதவிப் பேராசிரியர்
5.செல்வி.ம.ஆத்ம ரூபாவதி உதவிப் பேராசிரியர்
6.திரு.தே.பெனட் பால் கிப்ட்சன் உதவிப் பேராசிரியர்
7.செல்வி.ரா.திவ்யா உதவிப் பேராசிரியர்
8.திருமதி.ஞா.பானுப்பிரியா உதவிப் பேராசிரியர்
9.செல்வி.பெ.லோகப்பிரியா உதவிப் பேராசிரியர்

### தகவல்கள்

1. திரு. மா.ரமேஷ், உதவிப் பேராசிரியர் - 9952910782
2. திருமதி. க.பவானி, உதவிப் பேராசிரியர் - 9940617310
3. திரு. தே.பெனட் பால் கிப்ட்சன், உதவிப் பேராசிரியர் - 9677977133

**மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி**
**22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021**

## <u>பதிவுப்படிவம்</u>

தேதி :..................................

**கல்லூரியின் விவரம்** :

கல்லூரியின் பெயர் :

முகவரி :

தொடர்புக்கான ஆசிரியர் பெயர் :

தொடர்பு எண் :

மின்னஞ்சல் முகவரி :

**முதல் மாணவ வழக்குரைஞர்**

பெயர் :

பயிலும் ஆண்டு :

தொடர்பு எண் :

மின்னஞ்சல் முகவரி :

**புகைப்படம்**

**இரண்டாம் மாணவ வழக்குரைஞர்**

பெயர் :

பயிலும் ஆண்டு :

தொடர்பு எண் :

மின்னஞ்சல் முகவரி :

**புகைப்படம்**

SRM INSTITUTE OF SCIENCE AND TECHNOLOGY (Deemed to be University ...)

## மூன்றாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
## 22-அக்டோபர் 2021 மற்றும் 23 அக்டோபர் 2021

### ஆராய்ச்சியாளர் விவரம்

புகைப்படம்

பெயர் :

பயிலும் ஆண்டு :

தொடர்பு எண் :

மின்னஞ்சல் முகவரி :

### உறுதிமொழி

பதிவுப் படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விவரங்களும் உண்மையானவை. பதிவு செய்த கல்லூரி மற்றும் மாணவர்கள் கூறப்பட்ட விதிமுறைகளை போட்டியின் கடைசி வரை கடைபிடிப்போம்.

**முதல் மாணவர் வழக்குரைஞர் கையொப்பம்**

**இரண்டாம் மாணவர் வழக்குரைஞர் கையொப்பம்**

**ஆராய்ச்சியாளர் கையொப்பம்**

**ஆசிரியர் பொறுப்பாளர் கையொப்பம்**

**கல்லூரி முதல்வரின் கையொப்பம் மற்றும் முத்திரை**

SRM
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

## தலைமை புரவலர்

முனைவர் **T.R.பாரிவேந்தர்,** நிறுவனர், வேந்தர்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

## புரவலர்கள்

**திரு.P.ரவி பச்சமுத்து,** தாளாளர்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

முனைவர் R.P.சத்திய நாராயணன், தலைவர்
எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

முனைவர் R.சிவக்குமார், துணை தலைவர்
எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

## இணை புரவலர்கள்

முனைவர் C.முத்தமிழ் செல்வன், துணைவேந்தர்
எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

முனைவர் S.பொன்னுசாமி, பதிவாளர்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

**முனைவர் C.A.குருதத், தலைவர்**
**சட்டப்பள்ளி எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்.**